# விழுப்புரம் நகராட்சி

2021-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **10-ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற "**அவசர கூட்ட**" நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** **போ.வி.சுரேந்திர ஷா,** எம்.ஏ.,
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**

## மன்றப்பொருள்

**1.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் மழைக்காலங்களில் மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள அனைத்து மழைநீரும் பேருந்து நிலையத்தில் குளம் போல் தேங்குவதால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 2009 ஆம் ஆண்டு ரூ.125.00 இலட்சம் மதிப்பீட்டில் நீரூந்து நிலையம் அமைக்கப்பட்டு அதில் 2-எண்ணிக்கையிலான 100HP மோட்டார் பொருத்தப்பட்டு அவ்வப்போது மழைநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. எனவே, புதிய பேருந்து நிலையம் முதல் பாண்டியன் நகர் கால்வாய் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.350.00 இலட்சம் மதிப்பீட்டில் நீண்ட காலமாக தீர்வு காணப்படாத பணிகளுக்கான நிதியின் (Long Term Mitigation Fund) கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு நீண்ட காலமாக தீர்வு காணப்படாத பணிகளுக்கான நிதியின் (Long Term Mitigation Fund) கீழ் மேற்கொள்ளவும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்கலாம்.

(2903/2021/இ1)

**2.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 42 வரையிலான பகுதிகளில் உள்ள ஆழ்துளை குழாய் கிணற்றின் (3HP to 20HP) மின்மோட்டார் மற்றும் Panel Board-களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.90 இலட்சத்திற்கு அனுமதியும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4835/2021/இ2)

**3.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 42 வரையிலான பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் தினசரி அதிகளவில் வருகிறது. மேலும், தற்போது மழைக்காலம் என்பதால் பொதுமக்களிடமிருந்து அதிகளவில் புகார்கள் வருவதை தவிர்க்கும் பொருட்டு, தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான உதிரி பாகங்களை சப்ளை செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.97 இலட்சத்திற்கு அனுமதியும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(4836/2021/இ2)

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி**